More than Studies! (TAMIL)

# படித்தால் மட்டும் போதுமா?

## கிறிஸ்தவ ஆசிரியப் பெருமக்களுக்கு ஒரு செய்தி





by

**R. ஸ்டான்லி,** B.E., M.Tech.

*திருமறைப் போதகராய் மாறிய*
*ஒரு கட்டிடப் பொறியியலர்*


**ஆசிரியர் தினம்**

5 செப்டம்பர் 2020

*(1990களில் சென்னை, கோவை, தூத்துக்குடி போன்ற மாநகர்களில் நடந்த ஒரு நாள் கிறிஸ்தவ ஆசிரியர் மாநாடுகளில் இவ்வாசிரியர் ஆற்றிய உரைகளில் ஒன்றே இக்கட்டுரை.)*

*TEENS TODAY* எனும் பத்திரிகையின் ஜூலை 1997 இதழில் “மனப்பான்மையே காரியம்” எனும் 20 பக்கப் பகுதி ஒன்று வெளிவந்தது. இப்பகுதியில் இன்றைய இளைஞர், “இப்படித்தான் என்று மற்றவர்கள் எங்களுக்குச் சொல்லுவதை ஒத்துக்கொள்ள எங்களுக்கு மனமில்லை; எதற்கும் எங்களுக்கு நல்ல விளக்கம் தேவை” எனக் கூறிக் கிளர்ச்சியூட்டும் கேள்விகள் பல தொடுத்துள்ளனர். தங்கள் வகுப்புகளில் சந்திக்கும் இத்தலைமுறை மாணவரைப் புரிந்துகொள்ள விரும்பும் பள்ளி ஆசிரியர், கல்லூரி விரிவுரையாளர் ஒவ்வொருவரும் இக் கேள்விப்பட்டியலைக் கவனமாய் வாசிக்கக் கோருகிறேன். அக்கேள்விகளில் இரண்டை இங்கு நமது சிந்தனைக்காய்க் குறிப்பிடுகிறேன்: “வயது வந்தவர்கள் ஓட்டுபோட்டுத் தேர்ந்தெடுத்த தலைவர்களில் பலர் தோல்விகளாகவே இருக்க, ஏன் ஒரு முறையாவது அவர்களைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பை வாலிபர்களாகிய எங்களுக்குத் தந்து பார்க்கக்கூடாது?” “உடலுக்கடுத்தவற்றிலும் அறிவிலும் எங்களை விருத்தியாக்குவதே கல்விக் கூடங்களின் நோக்கமானால், பாடங்களுக்கு மட்டும் அத்தனை வகுப்புகளும், மற்றவற்றிற்கு மிகச் சொற்பமான நேரம் மட்டுமே ஒதுக்கப்படுவது ஏன்?” இருபது ஆண்டுகளுக்கு முன்னுள்ள காலக்கட்டத்தில் கேட்கப்பட்ட இக்கேள்விகள் இன்றும் (2020) பொருத்தமானவையே!

முதல் கேள்விக்குப் பதில் இரண்டாம் கேள்வியில் மறைந்துள்ளது. நமது இன்றையத் தேசிய மற்றும் அரசியல் தலைவர்களில் பெரும்பாலானோர் ஒரு காலத்தில் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மாணவராயிருந்தவர்களே. அன்று அவர்கள் நற்பண்புகளைப் படிக்கவும் கற்பிக்கப்படவும் தவறியதே இன்று அவர்களது ஊழல்நிறை மட்டரகக் குணங்களுக்குக் காரணமாகும். இந்தியச் சுதந்திரத்தின் 74ஆம் ஆண்டிற்குள் நுழைந்துள்ள இக்காலத்தில், *“படித்தால் மட்டும் போதுமா?”* எனும் சவாலுடன் ஆசிரியர் தங்கள் மாணவருக்கு வாழ்வின் உயரிய பண்புகளைக் கற்பிக்க முழுப் பொறுப்பு எடுத்துக்கொள்ளாவிடில் இந்தியாவின் எதிர்காலம் இருளாகவே இருக்கும்.

-- 2

1970-71இல் திருச்சி பிராந்தியப் பொறியியல் கல்லூரியில் (REC/NIT) ஓர் ஆசிரியராக ஆறு மாதங்கள் பணிபுரிந்தது தவிர எனக்குக் கல்வித்துறை ஆசிரியப்பணியில் அனுபவம் கிடையாது. ஆசிரியையாயிருந்த எனது தாயாரிடமே நான் முதல் வகுப்பு பயின்றேன். எனது பள்ளிப்படிப்பையும் புகுமுக வகுப்பையும் (PUC) நாசரேத் மர்காஷிஸ் உயர்நிலைப் பள்ளி, பாளை புனித யோவான் கல்லூரி ஆகிய கிறிஸ்தவக் கல்விக்கூடங்களில் முறையே முடித்தேன். பட்டப்படிப்பையும் முதுநிலைப் பட்டப்படிப்பையும் காரைக்குடி அழகப்ப செட்டியார் பொறியியல் கல்லூரி, சென்னை இந்தியத் தொழில்நுட்பக் கல்லூரி (IIT) ஆகிய மதச்சார்பற்ற நிறுவனங்களில் முடித்தேன். இவ்விதக் கல்விக்கூடங்களில் மாணவனாகச் செலவிட்ட ஆண்டுகளும் மாணவருக்கு 50 ஆண்டுகள் செய்துள்ள கிறிஸ்தவப் பணியும் மாணவச் சமுதாயத்தைக் குறித்து ஓரளவு போதுமான அறிவையும், படிப்பிற்கும் கூடுதலாக அவர்களுக்குப் போதிக்கவேண்டியவை குறித்த தெளிவையும் தந்துள்ளன. தங்களது மாணவ மாணவியருக்குக் கட்டாயம் கற்பிக்கவேண்டிய ஐந்து முக்கிய மாண்புகளைக் கிறிஸ்தவ ஆசிரியப் பெருமக்களோடு இங்கு பகிர்ந்து கொள்ள விழைகிறேன். எளிதில் நினைவுபடுத்திக்கொள்ள இவற்றை நீங்கள் உங்கள் ஐந்து விரல்களில் பொருத்தமாய்க் குறித்துக்கொள்ளலாம்.

***1. பணிவு (SUBMISSION)*** **—** பெருவிரல்

கீழ்ப்படியாமையே இக்காலத்து ஆவி. முரட்டாட்டமே இன்றையப் பாணி. பெற்றோருக்கும் பெரியோருக்கும் கீழ்ப்படியாமையையே கடைசிக் காலத்தின், கடைசிக் கட்டத்தின், தவறாத அடையாளமெனப் பைபிள் முன்னுரைத் துள்ளது. “இறுதி நாட்களில் கொடிய காலங்கள் வரவிருக்கின்றன என அறிந்துகொள் ... பெற்றோருக்குக் கீழ்ப்படியாதோர் ... தோன்றுவர்” (2 தீமோ 3:1,2). கீழ்ப்படியாமையையும் பணிவின்மையையும் கடவுள் சினத்துடன் நோக்குகிறார். பழைய ஏற்பாட்டில் அவரது இறுதியான எச்சரிப்பே இதையடுத்ததுதான். “அவர் வந்து உலகைச் சபித்துத் தண்டிக்காதபடிப் பெற்றோரின் உள்ளங்களைப் பிள்ளைகளிடத்தும், பிள்ளைகளின் உள்ளங்களைப் பெற்றோரிடத்தும் திருப்பும்” திருப்பணியொன்றை அனுப்புவதாக மல்கியாவின் தீர்க்க நூலின் முடிவு வசனத்தில் வாக்குப்பண்ணியுள்ளார் (மல் 4:6). காலத்திற்கு முந்திய நியாயத்தீர்ப்பு இப்பூவுலகின்மீது கீழ்ப்படியாமையினால் விழுந்துவிடாதபடித் தடுத்து நிறுத்த கடவுளின் கரங்களில் கிறிஸ்தவ ஆசிரியர் அற்புத ஆயுதங்களாக முடியும்.

நாங்கள் மாணவராயிருந்த காலத்தில் ஆசிரியர் வகுப்பிற்குள் நுழைந்ததும் மரியாதையோடு எழுந்து நின்று அவரை வாழ்த்துச்சொல் ஒன்றுடன் வரவேற்போம். அவர் எங்களை உட்காரச் சொன்ன பின்னரே அமருவோம். பண்புமிகுந்த இப்பழக்கம் இந்நாட்களில், குறிப்பாகச் சில ஆங்கிலப் பள்ளிகளில், மறைந்து வருவது துர்ப்பாக்கியம். போதனா மொழி ஆங்கிலமாயிருக்கட்டும்; ஆனால் பழக்கவழக்கங்கள் மேலைநாடுகள்போல் மாறவேண்டியதில்லை. ஆசிரியர் வகுப்பிற்குள் வந்தாலும் சரி, பக்கத்தில் வந்தாலும் சரி, மாணவர்கள் காலணிகளோடு கால்களைத் தூக்கி மேசைமேல் வைத்துக்கொண்டு அப்படியே இருப்பது மேலை நாடுகளில் சாதாரணம். இந்தியாவில் இத்தகையப் பாழ் நிலைக்கு நாம் இறங்கிவிடமுடியாது. “நரைதிரண்டவருக்கு முன் எழுந்து நில்; முதிர்ந்தவர் முகத்தை மதித்து நட; உன் கடவுளுக்கு அஞ்சி வாழ்; நானே ஆண்டவர்!” என்று இளைஞரைத் திருவிவிலியம் அறிவுறுத்தியுள்ளது (லேவி 19:32). இந்தியாவைப் பொருத்தவரை, மரியாதைக்குரிய உடற்பாவனைகளை அர்த்தமற்ற பாரம்பரியங் களெனத் தூக்கியெறிந்துவிட முடியாது. வகுப்பறைகளில் இவற்றை வற்புறுத்துங்கள். மாடு மேய்ப்பதுபோல் “ஹாய்” என்றெல்லாம் அல்லாது, இந்தியப் பண்பாட்டுப் பாணியில் பெரியவர்களுக்கு வந்தனம் சொல்ல மாணவருக்குக் கற்றுக்கொடுங்கள்.

சட்டமன்றம் மற்றும் பாராளுமன்றம் நடந்துகொண்டிருப்பதை அப்படியே ஒளிபரப்ப எடுக்கப்பட்ட தீர்மானமானது நமது அரசியல் தலைவர்களின் மன்னிக்கமுடியாத குற்றங்களில் ஒன்றாகும். இவ்வுறுப்பினர்களின் மரியாதைக் குறைச்சலான கீழ்த்தரச் செயல்களைத் தொலைக்காட்சியில் பார்க்கும் இளைஞரிடமிருந்து நமது தலைவர்கள் எதைத்தான் எதிர்பார்க்கிறார்களோ ?

இன்று அவர்கள் எந்த அளவுக்கு அதிகாரத்திற்குக் கீழ்ப்படிகிறார்களோ அந்த அளவுக்குத்தான் நாளை அவர் கள் எந்நிலையில் அமர்த்தப்பட்டாலும் அதிகாரம் செலுத்த முடியுமென்பதை உங்கள் மாணவருக்குக் கற்பியுங்கள். இளைஞனாக இயேசு தமது பெற்றோருக்கும், வளர்ந்தவராகத் தமது விண்தந்தைக்கும் கீழ்ப்படிந்திருந்தார். எனவே பிசாசுகள் அவருக்குக் கீழ்ப்படியாமலிருக்க முடியவில்லை.

-- 3

கீழ்ப்படிதலும் பணிவுமுள்ளோரையுமே கடவுள் பொதுவாகத் தலைமைப் பொறுப்புகளுக்காகத் தெரிந்துகொள்ளுகிறார். கவர்ச்சியும் திறமைகளும் அடுத்துதான். தலைமைத்துவத்திற்கான தகுதிகளின் தெய்வீகப் பட்டியலில் தாலந்துகளும் திறன்களும் முதலிடம் பெறுவதில்லை. கீழ்ப்படிதலும் பணிவுமுள்ள மாணவருக்குப் பொறுப்புகள் கொடுத்து அவர்களைப் பயிற்றுவியுங்கள். பள்ளியிலும் கல்லூரியிலும் எனக்குப் பல்வேறு பொறுப்புகளைத் தந்த எனது ஆசிரியருக்காய்க் கடவுளுக்கு நன்றி சொல்லுகிறேன். கடவுள் என்னை ஓர் ஊழிய நிறுவனத்தை முன்னின்று நடத்த அழைத்தபோது இவ்விதக் கல்விக்கூடப் பயிற்சி கைகொடுத்தது.

***<u>2. நேர்மை</u>*** **<u>(SINCERITY)</u>** — ஆள்காட்டி விரல்

உண்மையானது தெரு முனைகளில் கொலை செய்யப்பட்டுக் கிடக்கிறது. உத்தமம் என்பது காண்பதரிதாகிவிட்டது. நாட்டின் எல்லா வாழ்க்கைத் துறைகளிலும் ஊழல் தலைவிரித்தாடுகிறது. இவ்வுலகிலேயே அதிக ஊழல் நிறைந்த நாடுகளில் ஒன்றாக இந்தியா காணப்படுகிறது. தங்களால் எதுவும் “செய்ய முடியவில்லை” என்று அரசியல் தலைவர்கள் கைவிரித்துவிட்டனர். சூழ்ச்சியான அரசியல், ஏமாற்று வியாபாரம், திரித்துக் கூறும் பத்திரிகை உலகு, இப்படி எதைச் சொன்னாலும் இவைகள் “உண்மையானவை, கண்ணியமானவை, நேர்மையானவை, தூய்மையானவை, விரும்பத்தக்கவை, பாராட்டுதற்குரியவை, போற்றுதற்குரியவை” ஆகிய அத்தனையையும் பின்வரிசைக்குத் தள்ளிவிட்டன (பிலி 4:8).

*INDIA TODAY* பத்திரிகை 1994இல் எடுத்த கணக்கெடுப்பு ஒன்றில் இந்தியாவின் எட்டு மாநகர்களிலிருந்து 1365 கல்லூரி மாணவ மாணவியரிடம் “நீங்கள் லஞ்சம் கொடுப்பீர்களா ?” என்று கேட்கப்பட்டபோது, 43% மாணவரும் 34% மாணவியரும் “கொடுப்போம்!” என்றனர். 2020ஆம் இவ்வாண்டில் இக்கணக்கெடுப்பு நமக்கு எதனைச் சொல்லுமோ ? நாடு எங்கே போய்க்கொண்டிருக்கிறது ? இக்கேள்விக்கு ஆம் என்று தலையசைப்போரின் சதவீதம் 75ஐ எட்ட நெடுநாள் பிடிக்குமோ ? முன்னேற்றத்தைப்பற்றிப் பேசிக்கொண்டு ஆனால் தான் அழிந்துகொண்டிருப்பதை அறியாதிருக்கும் சமுதாயத்திற்குக் கணிப்பொறியியலிலும் மருத்துவக் கலையிலும் சிறந்தோங்குவதா நிவாரணம் ? இச்சரிவைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தடுத்து நிறுத்தாவிடில் எங்கே அதைச் செய்யப் போகிறோம் ? ஆசிரியரே, *படித்தால் மட்டும் போதாது* என்பதே மாணவர் படிக்கவேண்டிய முதல் பாடம்!

பரீட்சைகளில் நடக்கும் தில்லுமுல்லுகளுக்குத் திடமாய் மறுப்பு தெரிவிக்கப் பயிற்றுவிக்கப்படாத மாணவன் உத்தமக் குடிமகனாய் வளருவது அசாத்தியம். காப்பியடிப்பது போன்ற வெட்ககரச் செயல்களுக்கான சோதனைகளுக்கு எதிர்த்து நிற்க மாணவரது “மனச்சாட்சியை” ஆசிரியர் கூர்மையாக்கவேண்டும். வாராந்திர வகுப்புப் பரீட்சை ஒன்றிற்கு ஆயத்தம் செய்ய மறந்துவிட்டதாலும் எனது முதலிடத்தை விட்டுக்கொடுக்க மனதில்லாதிருந்ததினாலும் நான் ஒருமுறை காப்பியடித்தேன் — எனது மாணவப் பருவத்தில் நான் இவ்விதம் செய்தது இந்த ஒரே தடவைதான். ஆனால் எனது தலைமையாசிரியரிடம் நானாகச் சென்று அறிக்கையிட்டு மன்னிப்புக் கோரும்வரை ஆறு மாதங்கள் எனது மனச்சாட்சி என்னை வதைத்தது. எப்பொழுதும் மனச்சாட்சியைக் கூர்மையாகவும் தெளிவாகவும் வைத்துக்கொள்ள அவர் என்னை ஊக்குவித்து அனுப்பினார். நம்மைத் தடுத்து நிறுத்தும் பிரதான சக்தி அகப்பட்டுக்கொள்வோமோ என்ற பயமாயிருக்கக்கூடாது. “எல்லாருந்தான் செய்கிறார்கள்” எனும் விவாதம் வாலிபருக்கு வேண்டாவாதமாயிருக்கவேண்டும். கணக்கு அல்லது விஞ்ஞான வகுப்புக்கு ஆயத்தம் செய்யுமளவு நீதிநெறி வகுப்புகளுக்கும் ஆசிரியர்கள் ஆயத்தம் செய்யவேண்டும். பிசாசின் பெரும்பான்மையோருக்கு எதிர்த்து நிற்க மாணவரின் முதுகெலும்பைப் பலப்படுத்த வேண்டியது ஆசிரியரின் கடமையாம். உடன் மாணவரின் இழுப்பு சாதாரணமானதல்ல.

தாவீதரசன் எழுதியவைகளில் இதோவோர் உயரிய உண்மை: “சான்றோரைப் பார்; நேர்மையானவரைக் கவனி; அமைதியையே நாடும் அம்மனிதருக்கு வழிமரபினர் இருப்பர்” (சங் 37:37). உண்மைக்காய் நிற்கும் சிறுபான்மையோருடன் ஒன்றித்து நிற்க அதே திருப்பாடலில் தாவீது நம்மை ஊக்குவிக்கிறார்: “தீமை செய்வோரைக் கண்டு மனம் புழுங்காதே; பொல்லாங்கு செய்வோரைக் கண்டு பொறாமைப்படாதே ... ஆண்டவரை நம்பு; நலமானதைச் செய் ... தம் வழியில் வெற்றி காண்போரையும் சூழ்ச்சிகள் செய்வோரையும் பார்த்து எரிச்சல்

-- 4

கொள்ளாதே ... உன் வழியை ஆண்டவரிடம் ஒப்படைத்துவிடு ... உன் நேர்மையைக் கதிரொளி போலும் உன் நாணயத்தை நண்பகல் போலும் அவர் விளங்கச்செய்வார்'' (வச 1,2,7,5,6). இவ்வித விண்ணக வித்துக்களை இளம் உள்ளங்களில் ஊன்றிச் சீரழியும் பாழுலகிலிருந்து இளைஞரைக் காப்போம்.

திறம்பட்ட வீரர்களையல்ல, திரைப்பட வில்லன்களையே இத்தலைமுறை இளைஞர்கள் பார்த்திருக்கிறார்கள்! மழுப்ப மறுப்பவர்கள், தவற்றைத் தவறென்பவர்கள், சந்தர்ப்பவாதிகளல்ல, சத்தியவாதிகள், இப்படிப்பட்டவர்களே வீர வர்க்கத்தினர். திருவிவிலியச் சரித்திரத்திலிருந்து உங்கள் மாணவருக்கு வீரத்தைக் கற்பியுங்கள். எடுத்துக்காட்டாக, மன்னன் பார்வோன் ஆணையிட்டிருந்தும் ஆண் குழந்தைகளைக் கொன்றுவிட மறுத்த எகிப்து நாட்டுத் தாதியரைப்பற்றிச் சொல்லுங்கள் (யாத் 1:15-21). திருச்சபை வரலாற்றிலிருந்து இரத்தச்சாட்சிகள் மற்றும் முன்னோடி மிஷனரிகளைக் குறித்துக் கூறுங்கள். ஜெர்மனி நாட்டிலுள்ள சரித்திரப் பாடப்புத்தகங்களில் ஹிட்லரின் பெயரே கிடையாது தெரியுமா? தங்கள் பாடப் புத்தகங்களில் இந்தப் ''பைத்தியக்காரனைப்'' பற்றி எதையும் வாசிப்பது வெட்கம் என்கின்றனர் ஜெர்மானிய இளைஞர். இவ்விதச் சரித்திரச் சான்றுகள் மூலம் ''என்னை மதிப்போரை நான் மதிப்பேன்; என்னை இகழ்வோர் இகழ்ச்சி அடைவர்'' என்ற ஆண்டவரின் கூற்றை விளக்குங்கள் (1 சாமு 2:30ஆ).

## <u>*3. இரட்சிப்பு*</u> <u>**(SALVATION)**</u> — நடுவிரல்

மையமானதும் நீளமானதுமான நடுவிரல் ஆன்மாவின் அழியாமையையும் மீட்பின் முக்கியத்துவத்தையும் அம்சமாய்க் குறிப்பிடுகிறது. ''ஒருவர் உலகம் முழுவதையும் தமதாக்கிக்கொண்டாலும் தம் ஆன்மாவையே இழப்பாரெனில் அவருக்கு கிடைக்கும் பயன் என்ன?'' என்றார் இயேசு (மாற் 8:36).

கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வோரில் 20க்குப் 19 பேர் 25 வயதிற்குமுன் அப்படிச் செய்கின்றனர். 25 வயதிற்குப் பின்னர் 10,000இல் ஒருவர் மட்டுமே கிறிஸ்துவிடம் திரும்புகிறார்; 35க்குப் பின் 50,000இல் ஒருவர் மட்டுமே; 45க்குப் பின் 2,00,000இல் ஒருவர் மட்டுமே; 55க்குப் பின் 3,00,000இல் ஒருவர் மட்டுமே; 65க்குப் பின் 5,00,000இல் ஒருவர் மட்டுமே; 75க்குப் பின் 7,00,000இல் ஒருவர் மட்டுமே! வேறுவிதமாய்ச் சொன்னால், பள்ளி அல்லது கல்லூரியை விட்டு வெளியேறிய பின் மாணவர்கள் கிறிஸ்து அருளும் மீட்பின் அனுபவத்திற்குள் வருவது அரிதாயிருக்கிறது. அப்படியானால், இளந்தலைமுறையினரை உலக இரட்சகரிடம் நடத்தும் பொறுப்பும் சிலாக்கியமும் ஆசிரியர் கையில் எவ்வளவாயிருக்கிறது!

அறிவுத் திறன், கடின உழைப்பு, விளையாட்டுப் போட்டி, தாலந்துகள் போன்ற யாவையும் ஒவ்வொரு பூஜ்யத்திற்கு ஒப்பிடலாம். எத்தனை பூஜ்யங்களைக் கூட்டினாலும் மதிப்பு பூஜ்யந்தான். ஆனால் ''1'' எனும் எண்ணுக்குப் பின்னர் பூஜ்யம் வருமானால் மதிப்பு எப்படிப் பெருகுகிறது! நித்திய மீட்பைக் குறிப்பிட்டு இயேசுவானவர், ''தேவையானது ஒன்றே'' என்றார். இதுவரை வாழ்ந்தோரில் மிகப்பெரும் ஞானியாகிய அரசன் சாலொமோன், ''ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்'' என்றெழுதினார் (நீதி 1:7). அடுத்துள்ள வருங்காலத்திற்காகப் பயிற்றுவிப்பதோடு தூரத்திலுள்ள எதிர்காலத்திற்காகவும் மாணவரை ஆசிரியர் ஆயத்தப்படுத்தவேண்டும். கிறிஸ்தவ ஆசிரியர் தங்கள் மாணவர்களை அழியா ஆசீர்வாதங்களை அனுபவிக்கச் செய்ய இதோ சில வழிகள் —

■ பைபிள் படிப்பதற்கும் ஜெபிப்பதற்கும் கல்லூரி அல்லது விடுதிக்கு உள்ளே அல்லது வெளியே வாரமொரு முறையாவது கூடிவரக் கிறிஸ்தவ மாணவரை ஊக்குவியுங்கள். தீமோத்தேயுக்களையும் தீத்துக்களையும் கண்டு பிடித்து அவர்கள் மூலம் இக்குழுக்கள் ஆண்டவரை அறிகிற அறிவில் வளர வழிசெய்யுங்கள். ஒரு சில வேளைகளிலாவது நீங்களும் இக்கூடுகைகளில் கலந்துகொண்டு மாணவரை உற்சாகப்படுத்துங்கள். கடவுளது சிறிய மந்தைகளோடு உங்களை அடையாளப்படுத்திக்கொள்ளத் தயங்கவோ நாணவோ வேண்டாம். கிறிஸ்தவ வட்டாரங்களில் பாஸ்டர்களாக ஊழியம் செய்ய எத்தனை போட்டி! ஆனால் மாணவ ஊழியமோ கல்லூரி வளாகங்களில் போதுமான மேய்ப்பர்களில்லாது எவ்வளவாய்ப் பாதிக்கப்படுகிறது! பிரிய கிறிஸ்தவ ஆசிரிய நண்பரே, கடவுள் உங்களை அப்பள்ளியிலோ அக்கல்லூரியிலோ வைத்திருக்கும் நோக்கத்தை தோற்கடித்துவிடாதீர்கள்.

-- 5

■ இளைஞர் ஊழியங்களுக்கு ஒத்துழைப்பு கொடுங்கள். இந்திய நற்செய்தி மாணவர் ஒன்றியம் (UESI), வேதாகம ஐக்கியம் (SU), கிறிஸ்துவுக்கு வாலிபர் (YFC), ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் “இயேசுவுக்கு மாணவர்” (SFJ) ஆகியவை இளைஞருக்கான தீவிர ஊழியங்களில் சிலவாகும். ஒவ்வொரு ஊழியத்திற்கும் ஒவ்வொரு தனிச் சிறப்பும் சொந்தப் பாணியும் உண்டு. அனைத்து வகை மாணவரின் அனைத்துத் தேவைகளையும் எந்தவொரு ஊழியமும் தனியே நிறைவேற்றிவிட முடியாது. எனவே அந்தந்த ஊழியத்தின் சிறப்புப் பணிகளைத் தகுந்தாற்போல் மாணவரை ஆசீர்வதிக்கப் பயன்படுத்துங்கள். இவ்வியக்கங்களின் முகாம்களுக்கு ஆர்வமுள்ள மாணவரை ஆகும் செலவு கொடுத்து அனுப்பிவையுங்கள். ஜான் வெஸ்லியும் (1703–1791) சார்ல்ஸ் வெஸ்லியும் (1707–1788) மாணவப் பருவத்தில்தான் விண்ணக தரிசனம் பெற்று மெதடிஸ்ட் சபையை நிறுவினர். இன்றும் நாட்டளவில் அல்லது உலகளவில் செயல்படும் மிஷனரி இயக்கங்கள் பல மாணவர் ஊழியங்களாய்த் தொடங்கியவையே. ஆசீர்வாத இளைஞர் இயக்கம் (1971) அதற்கோர் எடுத்துக்காட்டு.

■மாணவரது நற்செய்திப்பணி முயற்சிகளைப் பொருளுதவியினால் தாங்குங்கள். பண வசதியைப் பொருத்தவரை மாணவர் பலர் நடுவகுப்பு அல்லது கீழ்வகுப்பைச் சேர்ந்தவர்கள்தான். கிராம ஊழியங்களுக்குச் செல்லப் பயணக் கட்டணம் போன்றவற்றிற்காய்ச் செலவழிக்க அவர்களிடம் போதுமான கைப்பணம் இருப்பதில்லை. மட்டுமல்ல, இவ்வித ஊழியங்களுக்கு அவர்களுக்குக் கைப்பிரதிகள், நற்செய்திப் பங்குகள், புதிய ஏற்பாடுகள் போன்றவையும் தேவை. ஆர்வத்துடன் வினவிக்கொண்டிருந்த கிறிஸ்தவரல்லாத சில மாணவருக்கு வேதப் புத்தகம் வாங்கிக் கொடுக்கப் பணமில்லாது காரைக்குடியில் எங்கள் கல்லூரி ஜெபக்குழுவில் (1967) ஜெபித்துக்கொண்டிருந்தோம். தஞ்சாவூரிலிருந்து ஒரு மருத்துவர் குடும்பத்தினர் எங்களுக்குப் பன்னிரண்டு பைபிள்கள் அனுப்பிவைத்தனர். அப்பப்பா, கடவுள் இவ்வளவு அற்புதமாய் எங்களது தேவையைச் சந்தித்ததற்காகக் காட்டில் எங்களது மாலை ஜெபக் கூடுகையில் எவ்வளவாய் ஆனந்தித்தோம்! இந்தியாவில் ஆசிரியர்களுக்கு ஓரளவு நல்ல ஊதியம் கிடைக்கிறது. மாணவர் ஊழியத்திற்குச் செலவிடுவது சபைக்கும் சமுதாயத்திற்கும் தேவையான அடுத்த தலைமுறைத் தலைவர்களுக்கான முதலீடாகும். அள்ளிக்கொடுங்கள்.

■உங்கள் மாணவர் ஒவ்வொருவருக்காகவும் பிரார்த்தியுங்கள். அவர்களில் ஒருவரும் கெட்டுப்போவது கடவுளின் விருப்பமல்ல (1 தீமோ 2:1,4; மத் 18:14). எனது ஆறாம் வகுப்பாசிரியராகிய திரு. மைக்கல் செல்லத்துரை அவர்கள் 1957 முதல் எனது இரட்சிப்பிற்காக ஜெபித்து வந்திருந்திருக்கிறார். 1962இல் இரட்சிக்கப்பட்டேன். எதிர்காலப் பிரசங்கியார் ஒருவருக்காகவே ஜெபித்து வந்திருந்திருப்பதாக அவர் நினைத்திருப்பாரா ? உங்கள் மாணவரின் பெயர்ப் பட்டியலொன்றை வைத்துக்கொண்டு தினம் ஒரு மாணவன் அல்லது மாணவிக்காய்ப் பிரார்த்தித்தால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கொருமுறை ஜெபப் பாக்கியம் கிடைக்கும். இதிலும் குறைவாக நீங்கள் மாணவருக்கு என்ன செய்யப்போகிறீர்கள் ?

■ மாணவரோடு நேரடியாக நற்செய்தியைப் பகிர்ந்துகொள்ள ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்துங்கள். “மத மாற்றம்” (conversion) செய்கிறீர்களென நீங்கள் குற்றஞ்சாட்டப்படலாம். இல்லை, “மறு மாற்றம்” (reconversion) செய்கிறேனென்று பதில் சொல்லுங்கள். படைப்பின்படி அனைவரும் கடவுளுக்குச் சொந்தமானவர்கள். கிறிஸ்தவனாகவோ கிறிஸ்தவனல்லாதவனாகவோ எவரும் பிறப்பதில்லை. தெரிந்தெடுப்பின்படி நாம் கடவுளை விட்டு, நமது பாவ வழிகளில் சென்றுவிட்டோம். படைப்பின் இறைவனிடம் “மறுபடி வர” கிறிஸ்துவே வழி (ஏசா 53:6; யோ 14:6). இந்தியாவின் இரண்டாம் குடியரசுத் தலைவராகுமுன் டாக்டர் S. ராதாகிருஷ்ணன் அவர்கள் சென்னையில் தத்துவக்கலைப் பேராசிரியராயிருந்தார். அவரது “குரு-சிஷ்யன்” எனும் விரிவுரையொன்றைத் தொடர்ந்து அவரது மாணவரில் ஒருவன், அவரைத் தனது குருவாக வைத்துப் பின்பற்றலாமா என வினவினான். இதற்கு டாக்டர் ராதாகிருஷ்ணன், “இயேசு ஒருவரே குறைவற்ற குரு” என்றார். ஓர் இந்துமதத் தத்துவ ஞானியிடமிருந்து வந்த இவ்விதப் பதிலினால் அதிர்ச்சியுற்ற அம்மாணவன் புதிய ஏற்பாட்டை வாங்கி வாசிக்கலானான்; வெகு விரைவில் கிறிஸ்து தரும் இரட்சிப்பைப் பெற்றுக்கொண்டான். அவர்தான் கேரளாவைச் சேர்ந்த பிரபலப் பிரசங்கியார் திரு. பால் சுதாக்கர்! டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களது பிறந்த நாளன்றுதான் இந்தியாவில் ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது. நான் கல்லூரியில் நுழைந்த ஆண்டில் (1962) என்னைக்

-- 6

கிறிஸ்துவிடம் நடத்தியது எனது இராசயனப் பேராசிரியர்! நீங்கள் கரிசனையாயிருந்தால் உங்கள் வார்த்தைகளை மாணவர்கள் கருத்தாய்க் கவனிப்பார்களென்பதை நினைவிற்கொள்ளுங்கள்.

தொலைவிடங்களுக்குப் புறப்பட்டுச் செல்லும் மிஷனரிகளைவிட ஆசிரியராகிய உங்களுக்கு வாய்ப்புகள் ஏராளம். மாணவர்கள் உங்களைத் ‘‘தேடிவந்த பணித்தளம்!’’ இளமையிலேயே அவர்களை இறுகப் பிடியுங்கள்! வயதானதொருவர் இரட்சிக்கப்பட்டால் அவரது ஆன்மா ஒன்றே மீட்கப்படுகிறது; வாலிபனொருவன் இரட்சிக்கப்பட்டாலோ அவனது வாழ்க்கையும் பாதுகாக்கப் பட்டுவிடுகிறதே!

***4. சமூக நேயம்*** **(SOCIABLENESS)** — மோதிர விரல்

கல்லூரி வளாகத்தைவிட்டு வெளியேறுமுன்னரே மாணவர் சகமனிதவுறவுக்கடுத்த அடிப்படைத் தத்துவங் களைக் கற்றுக்கொள்ளவேண்டும். இளைஞன் இயேசு ‘‘மனிதருக்கு உகந்தவராய்’’ வளர்ந்தார் என்று வாசிக் கிறோம் (லூக் 2:52).

கல்லூரி வளாகச் சண்டைகளும் மாணவர் போராட்டங்களும் கூடிக்கொண்டே வருகின்றன. தங்களது சுய நோக்குத் திட்டங்களுக்குச் சாதனங்களாய் அரசியல்வாதிகள் அறியா வாலிபரைப் பயன்படுத்திவருகின்றனர். அமிலம் எறிதல், வெட்டு குத்து எல்லாம் சாதாரணமாகிவிட்டன. எவ்வளவு கண்டிப்பாயிருந்தாலும் சட்டங்கள் இதற்கு நிவாரணமாகா. மனநிலையில் தெளிவுண்டாகி மனப்பான்மை மாறுவதொன்றே பரிகாரம். ஒவ்வொரு வகுப்பின் கடைசி ஐந்து நிமிடங்களை ஏதாவது ஒரு சிறுகதை அல்லது சம்பவம் மூலம் நீதிநெறியொன்றை விளக்கப் பயன்படுத்துங்கள். சாலொமோனின் நீதிமொழிகளிலிருந்தும் இயேசுவின் மலைப்பிரசங்கத்திலிருந்தும் கருத்துக்களைத் தாராளமாய் எடுத்தாளுங்கள். ‘‘இயேசு நாதரின் மலைப்பிரசங்கத்தைப் படியாதவன் முழுமையான இந்து அல்ல’’ என்றார் காந்தியடிகள். அவர் தன்னிடம் எப்பொழுதும் ஒரு புதிய ஏற்பாட்டை வைத்திருந்தார். ‘‘உன்னைப்போல் பிறனையும் நேசி’’ — உறவுப் பிரச்னைகள் யாவற்றையும் தீர்க்கப் பொன்னான சட்டம் இதுவே (ரோ 13:9; கலா 5:14,15).

அடிப்படை நடைப்பாங்குகளை மாணவருக்குக் கற்பியுங்கள். நன்றி சொல்ல; ‘‘தயவுசெய்து’’ என்று கேட்க; எப்படி வாழ்த்துவது; புன்முறுவலின் பலாபலன்; அன்பான விசாரிப்புகள்; இவை போன்றவை. வாழ்க்கைக்குத் தேவையான இவற்றையெல்லாம் பாடப் புத்தகங்கள் போதிப்பதில்லை.

ஜீன்ஸும் T–ஷர்ட்டும் அணிந்திருந்த நாகரீக வாலிபர் சிலர் ஓர் உணவகத்தில் சாப்பாட்டு மேசைக்குக் கீழேயே கைகழுவிவிட்டதைக் கண்டு அதிர்ச்சியுற்றேன். சமூகவுணர்வில் நீங்கள் மாணவரை வளர்க்காவிடில் அவர்கள் படித்த முட்டாள்களாகவே கல்லூரிகளைவிட்டு வெளிவருவர். அவர்கள் எங்கும் துப்புவர்; கழிவறைகளில் படம் வரைவர்; பேருந்துகளிலும் ரயில் பெட்டிகளிலும் புகைப்பர்; சுவர்களிலும் சாலை அடையாளப் பலகைகளிலுங்கூட விளம்பரங்கள் ஒட்டுவர்; சாலை நடுவில் வாழைப்பழத் தோலை எறிவர்; இப்படிப் பலப்பல.

அப்படியே, இளமைப் பருவத்தில் எவ்வளவு சீக்கிரம் மறுபாலரைக் கண்ணியமாய் நடத்தப் படிக்கிறார்களோ, அவ்வளவு தூரம் அவர்கள் பிற்காலத்தில் பாலியல் பாவங்களுக்கு விலகியோடுவர். நிர்வாணப் படங்களும் ஆபாசத் திரைப்படங்களும் வெள்ளம்போல் வந்துள்ள இக்காலத்தில் நீதிநெறிகளெல்லாம் தூக்கியெறியப்பட்டுள்ளன. 1990களில் எடுக்கப்பட்ட புள்ளி விபரம் ஒன்றின்படி 48% வாலிபரும் 18% நங்கையரும் திருமணமாகுமுன் பாலுறவு கொள்ளுவது தவறல்ல என்கின்றனர். இன்று இச்சதவீதம் என்னவாயிருக்குமோ? அரசாங்கமும் கட்டுப்பாடுள்ள பாலுறவு அல்ல, ‘‘பாதுகாப்பான’’ பாலுறவு குறித்தே பேசிக்கொண்டிருக்கிறது. ஓரினச் சேர்க்கையை அரசு சட்ட பூர்வமாக்கிவிட்டது.

போதை மருந்துகள், மதுபானம், தவறான பாலுறவு ஆகியவற்றினால் கோயிலாகிய (கோ+இல்) நமது உடலைப் பாழ்ப்படுத்தாமல் எவ்விதம் அதைப் புனிதமாய்க் காத்துக்கொள்ளவேண்டுமென பைபிளிலிருந்து மாணவ மாண வியருக்கு விளக்கிச் சொல்லுங்கள்.

***<u>5. சேவை மனது</u>* <u>(SERVICE-MINDEDNESS)</u>** — கட்டை விரல்

திடீரென்று ஒருவரும் அன்னை தெரசாவாகிவிட முடியாது. இளம் பிராயத்திலிருந்தே சேவை மனப்பான்மையும் பணிவிடைத் தத்துவங்களும் இதயத்தில் வேரூன்ற வேண்டும். சிலர் இயற்கையாகவே கனிவுள்ளம் கொண்டிருப்பர். ஆனால் துன்புறுவோருக்கு உதவுதல் இறைவனுக்குச் செய்யும் தொண்டு எனப் பெரும்பாலானோருக்குச் சொல்லித்தான் தெரியும். உணவு, உடை, உறைவிடம், உறவினர் போன்றவை இல்லாதோருக்குச் செய்யப்படும் உதவி தனக்கே செய்யப்பட்டதாகுமெனக் கூறுமளவு இயேசு இவ்வித மக்களோடு தன்னை அடையாளப் படுத்திக்கொண்டார் (மத் 25:34-40). “ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்” என்பார் மறைந்த தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா! “ஏழைக்கு இரங்கி உதவி செய்கிறவர் ஆண்டவருக்குக் கடன் கொடுக்கிறார்” என்று அரசன் சாலமோன் எழுதினார் அல்லவா ? (நீதி 19:17). செப்டம்பர் 5அன்று அன்னை தெரசா தினம் என்றும் அனுசரிக்கப்படுகிறது.

முடிந்த வகையிலெல்லாம் சமூக நலத் தொண்டுகளில் ஈடுபட உங்கள் மாணவரை ஊக்குவியுங்கள். *படித்தால் மட்டும் போதுமா ?* தேவையிலிருக்கும் சகமனிதருக்கு நமது பட்டதாரிகளால் உதவத் தெரியாவிடில் அவர்கள் படித்ததில் என்ன பயன் ? மருத்துவப்பணிதான் ஒரு காலத்தில் மிகவுயரிய பணியெனக் கருதப்பட்டது. இன்றோ அதுதான் எல்லாவற்றிலும் இலாபம் மிகுந்த தொழில் எனும் நிலைக்கு இறங்கியுள்ளது. படிக்க இடத்தைப் பணங்கொடுத்து வாங்குவது இதற்கொரு நிரூபணமன்றோ ? மருத்துவக் கல்லூரிகளில் நீங்கள் ஆசிரியராயிருந்தால் மருத்துவரே இல்லாத கிராமங்களுக்கும், ஒரு மருந்தகம் தேடி 30 கிலோ மீட்டர் நடக்கவேண்டிய நிலையிலுள்ள இடங்களுக்கும் மருத்துவப்பணி செய்யச் செல்லும்படி உங்கள் மாணவருக்குச் சொல்லிக்கொண்டேயிருங்கள்.

நாங்கள் கல்லூரி மாணவராயிருக்கையில் (1963–1970) எங்கள் கைப்பணத்திலிருந்து சில பலகாரங்கள் வாங்கிக்கொண்டு தொழுநோயாளிகள் இருந்த ஓரிடத்திற்கு வாரந்தோறும் சென்றுவந்தோம். அவர்களோடு உட்கார்ந்தோம், அவர்களோடு பாடினோம், அவர்களோடு ஜெபித்தோம். அவர்களுக்கும் எங்களுக்கும் என்னே மகிழ்ச்சி! அந்த மாணவர் ஜெபக்குழுவிலிருந்த பலர் இன்று சமூக நலத் திட்டங்களில் பெரிய அளவில் ஈடுபட்டிருப்பது எனக்கு ஆச்சரியமாயில்லை.

கல்லூரிகள் விட்டு வேலையில் அமருமுன்னரே வரதட்சணைக்கெதிரான கருத்துக்களை மாணவரின் மனதில் விதைத்துவிடவேண்டும். மணமகளை எரித்தல், உடன்கட்டையேறுதல், சிறுபிள்ளை மணம், தேவ தாசிப் பழக்கம் போன்ற சம்பவங்களைச் செய்தித்தாள்களிலிருந்து மாணவருக்கு வாசித்துக் காட்டி இவ்விதக் காட்டுமிராண்டிச் செயல்களுக்கெதிராக அணிவகுக்க அவர்களைக் கிளறிவிடுங்கள். செராம்பூர் பல்கலைக் கழகம் நிறுவிய மிஷனரி வில்லியம் கேரி அவர்கள் ராஜாராம் மோகன்ராய் (1772–1833) போன்ற மனிதரோடு சேர்ந்து உடன்கட்டையேறுதல் ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டுவர அரசை வசப்படுத் தினார். வெள்ளையன் வெளியேறிவிட்டான்; ஆனால் மூடப் பழக்கங்கள் நம்மை விட்டு வெளியேறுவது எப்போ ?

படிப்பில் பின்தங்கியுள்ள மாணவருக்கு உதவ நன்றாய்ப் படிக்கும் மாணவருக்குச் சவாலிடுங்கள். புத்தகங்கள் மற்றம் கருவிகள் வாங்குவதில் ஏழை மாணவருக்கு உதவ வசதியுள்ள மாணவரை ஊக்குவியுங்கள். தேவைக்கு மிஞ்சி நம்மிடம் இருப்பது இல்லாதவர்களுக்கு உதவு வதற்காகவே கடவுள் தந்ததாம்.

***முடிவுரை***

மதிப்பிற்குரிய ஆசிரிய நண்பரே, வாழ்வில் உருவெடுக்கும் முக்கிய ஆண்டுகளில் பெரும் பகுதியை மாணவர் உங்களிடமே செலவிடுகின்றனர். அவர்கள் வளரும்போது எவ்விதம் நடந்துகொள்வர் என்பதற்குக் கடவுளுக்கு முன் பொறுப்பாளிகள் நீங்களே. அவர் உங்களுக்குத் தகுந்த பலாபலனும் அருளுவார். இக்கட்டுரையில் வரிசைப்படுத்தியுள்ள பண்புகளில் நீங்கள் மாணவரை உத்தமமாய்ப் பயிற்றுவிப்பீர்களானால் நீங்கள் “வருங்காலத்திற்கு நல்ல அடித்தளம்” இடுகிறீர்கள் என்று பொருள். வளர்க உங்கள் பணி!

*(இக்கட்டுரையைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆசிரியரது இணையதளத்திலிருந்து இலவசமாய்ப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.)*

-- 8

உடலளவிலும், மனதளவிலும், ஆன்மீகத்திலும், சமூக வாழ்விலும் சமநிலையில் மாணவர் மாணவியர் வளரக் கீழ்க்கண்ட புத்தகங்களை அவர்கள் வாசிக்க ஊக்குவியுங்கள்.
இவை தமிழிலும் ஆங்கிலத்திலும் உண்டு.

by R. ஸ்டான்லி —

- ☐ *மாணவ மணிகளுக்கு ...* (60 பக்கங்கள்)
- ☐ *எதிர்நீச்சல் வாலிபர்!* (140 பக்கங்கள்)
- ☐ *வாலிபர் எழுப்புதல் கடிதங்கள்* (1024 பக்கங்கள்)

by Dr. லில்லியன் ஸ்டான்லி —

- ☐ *வயது பதினாறிருக்கும்* (84 பக்கங்கள்)
- ☐ *வாலிபர் உலகம்* (72 பக்கங்கள்)
- ☐ *பசங்க, பொண்ணுங்க* (130 பக்கங்கள்)

- கிடைக்குமிடம் -

R. Stanley
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
*<stanleyonbible@hotmail.com> <evangeline@stanleyonbible.com>*
***www.StanleyOnBible.com***